அளிக்கப்பட்டு இருக்கிறது. பூர்வாங்க வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நமக்கு சரியான எஸ்டிமேட் அதாவது மதிப்பீடுகள் தயார் செய்து, ரயில்வே துறையோடு கலந்து பேசி, - அவர்களும் தொகையை ஒதுக்குவதற்குத் தயாராக இருக்கிறார்கள். நாமும் பணத்தை ஒதுக்குவதற்கான நடவடிக்கைகளில் இறங்கி இருக்கிறோம். ஆகவே நிதித்துறையோடு கலந்து பேசி, ரயில்வே துறையிடம் கலந்து பேசி - 7 கோடி ரூபாய்ச் செலவில் கட்டப்பட இருக்கின்ற இந்தப் பாலத்தின் பணிகளை விரைவிலே துவக்குவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 307. திரு. கே. செல்வராஜ். மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகரப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

307—

கோயம்புத்தூர் கூடை முனைவோர்களுக்குப் புதிய வீடுகள் கட்டுதல்

***39974-** திரு. கே. செல்வராஜ்:*

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா-

கோயம்புத்தூர் அருணாசலம் ரோடு, மெக்ரிக்கன் ரோடு, தடாகம் ரோடு பகுதிகளில் உள்ள கூடை முனைவோர் குடியிருப்புகளுக்குப் பதிலாக புதிய மாடி வீடுகள் கட்டித்தரப்படுமா ?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு கோவையில் கூடை முடையும் தொழில் செய்வோர்கள் சுதந்திரம் பெற்றதிலிருந்து இருப்பிடம் இல்லாமல், தெருவோரங்களில் குடிசையிட்டு வசித்து வந்த அவர்களுக்கு, மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய நல்லாசியோடு இப்போது அருணாசலம் ரோடு பகுதியில் 115 வீடுகளை 70 லட்சம் ரூபாய்ச் செலவில் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டு உள்ளது. அதேபோல் மெக்ரிக்கன் பகுதியிலும் வீடுகளைக் கட்டவேண்டும் என்ற கோரிக்கைக்கு,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1995 ஏப்ரல் 17]

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்றையதினத்தில் 'ஆம்' என்று கூறியதற்கு, என் தொகுதி மக்கள் சார்பாகவும், கூடை முடையும் தொழில் செய்யும் மக்கள் சார்பாகவும், மகிழ்ச்சியோடு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது இந்த ஆண்டிலேயே கட்டப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை அருணாசலம் ரோடு, மெக்ரிக்கன் ரோடு மற்றும் தாடாகம் ரோடு சந்திப்பில் உள்ள கூடை முடைவோர்களுக்காக, மீனவர் காலனி திட்டப் பகுதியில் 62½ சென்ட் நிலம் கோவை மாநகராட்சியிடமிருந்து கையகப்படுத்தப்பட்டுள்ளது. அந்தப் பகுதியில் 115 வீடுகளை 44.52 லட்சம் ரூபாய்ச் செலவில் கட்ட திட்டமிடப்பட்டு, இப்போது கட்டுமானப் பணிகள் துவங்கப்பட்டு உள்ளன. கூடை முடைவோர்களுக்கு எனத் தனியாக எங்கும் குடிசை மாற்று வாரியம் மூலம் வீடுகள் கட்டப்படுவது இல்லை. இருப்பினும் அந்த இடத்தில், அதிகமாக கூடை முடைவோர்கள் வசிப்பதால், அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் பொருட்டு, இன்றைக்கு அரசியலிலே புதுமையையும், புரட்சியையும் படைத்து, தமிழக மக்களுக்கு புதுவாழ்வைத் தந்து கொண்டிருக்கிற புத்துலகச் சிற்பி மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு (மேசையைத் தட்டும் ஒலி) கருணை உள்ளத்தோடு, அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, இன்றைக்கு கூடை முடைவோர்களுக்காக குடிசை மாற்று வாரியம் மூலம் வீடுகளைக் கட்டித் தந்து கொண்டிருக்கிறது.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மெக்ரிக்கன் ரோடு பகுதியில், சுமார் 250 பேர்கள் அதேபோல் வசித்து வருகிறார்கள். அந்த இடத்தையும் மாநகராட்சி இப்போது குடிசை மாற்று வாரியத்திற்கு ஒப்படைத்துவிட்டது. அந்த இடத்திலேயும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வீடுகளைக் கட்டுவதற்கு, கருணைகூர்ந்து மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களிடமிருந்து ஆணையைப் பெற்று, அங்கே வீடுகளைக் கட்டுவதற்கு ஆணை பிறப்பிக்கவேண்டும் என்றும், இன்றைக்கு 45 ஆண்டுகாலமாக வீடுகளே இல்லாத கூடை முடையும் தொழிலாளர்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுத்ததற்கு மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஆண்டிலே, இந்தப் பணிகளைச் செய்வதற்கு ஆணையிடுவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல் கட்டமாக 115 வீடுகள் இந்த ஆண்டு கட்ட எடுத்துக் கொள்ளப்பட்டு இருக்கின்றது. வரும் ஆண்டுகளிலே நிதிநிலையைப் பொறுத்தும், ஹட்கோ போன்ற நிறுவனங்களிலிருந்து நாம் பெறுகின்ற கடன் தொகையைப் பொறுத்தும், அதற்கான உரிய ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 308, டாக்டர் பெ. வீரபாண்டியன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

308—

செங்கத்தில் பெண்கள் சிறுதொழில் பயிற்சி மையம் துவங்குதல்

23669-டாக்டர் பெ. வீரபாண்டியன் :*

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா-

செங்கம் நகரில் பெண்களுக்கான சிறுதொழில் பயிற்சி மையம் துவங்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்சமயம் அரசிடம் செயற் குறிப்பு ஏதும் இல்லை.

டாக்டர் பெ. வீரபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற மாநிலங்களைவிட சிறுதொழில்கள் மற்றும் மிகச் சிறிய தொழில்களின் மேம்பாட்டிற்காக நம்முடைய தமிழக முதல்வர், டாக்டர், புரட்சித் தலைவி அவர்கள் மிக முனைப்புடன் செயல்பட்டு வருகிறார்கள். பெண் தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கும் திட்டத்திலே நாம் வெற்றி அடைந்திருக்கிறோம். சிறுதொழில்களுக்கு அரசின் அனுமதி கேட்டவுடனே கிடைக்கிறது. 1993-94 ஆம் ஆண்டில், கிட்டத்தட்ட 3400 பெண் தொழில் முனைவோர்களுக்கு பயிற்சி அளித்திருக்கிறோம். நடப்பு நிதி ஆண்டில், 1400 பேர்களுக்கு, பெண் தொழில் முனைவோர்களுக்கு அனுமதி அளித்து இருக்கிறோம். செங்கம் தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதி. திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தில், செங்கத்தை மையமாகக் கொண்டு, பெண்களுக்காக தொழில் பயிற்சி நிலையம் ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.